சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர

<u>அசல் வழக்கு எண்.125/2021</u>

<u>மற்றும் அசல் வழக்க எண்.167/2022</u>

<u>03.03.2025</u>

<u>வா.சா.1 திரு.ராஜேந்திரன் , த/பெ.கனகசபை</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் திருவிடைவாசல் ஆயிராம்மன்கோவில் தெருவில் வசித்து வருகிறேன். தாவா சொத்தில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்து திருவிடைவாசல் கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரம் 10 சென்ட் ஆகும். தாவா சொத்திற்கு மேற்கே ரெத்தினவேல் ஆசாரி வீடு உள்ளது. தாவா சொத்து எனக்கு எனது தாயார் பட்டம்மாள் கடந்த 1991-ல் எழுதி வைத்த உயில்படி எனக்கு கிடைத்தது. உயில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. உயில் எழுதி வைக்கும்போது எனது தாயார் நன்றாகத்தான் இருந்தார். உயிலில் சிவபிரகாஷம், கழுவையன், அன்புமணி ஆகியோர்கள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். என் தாயார் கடந்த 20.12.1991-ல் இறந்துவிட்டார். இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி குரூமுர்த்தி எனது உறவினரா என்றால் உறவினர் தான். பிரதிவாதி குரூமுர்த்தி எத்தனை வருடங்களாக தாவா சொத்தில் வசித்து வருகிறார் என்றால் நான் வெளியூரில் வசித்து வருவதால் தெரியவில்லை. எனது வீட்டிற்கு மேல்புறம் குரூமுர்த்தி வசிக்கிறார். எனக்கும் குரூமுர்த்திக்கும் தாவா பிரச்சனை தவிர வேறு பிரச்சனை இல்லை. கிராமத்தில் தாவா சொத்து சம்மந்தமாக சமரசம் செய்தோமா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதல்ல. கடந்த 1993-ல் ஊர் முக்கியதஸ்தர்கள் மூலம் சமாதானம் செய்யப்பட்டது என்றாலும், சமாதானப்படி மேல்பாதி குரூமுர்த்திக்கும், கீழ்பாதி எனக்கும் பேசப்பட்டது என்றால் சரியல்ல. அப்போது ஆவணம் எழுதப்பட்டு நான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராது மனுவை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். பிராதில் குரூமுர்த்தி பட்டா பெற்றுக்கொள்ள நான் அனுமதி வழங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பட்டா வழங்கப்பட்டதற்கு

பின்னிட்டு வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். சர்வேயர் சொத்தை அளந்து வரைபடம் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்தார். குரூமுர்த்தி பட்டா பெற அனுமதி கொடுத்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து குரூமுர்த்தில் அனுபவத்தில் கடந்த 1993 லிருந்து வருகிறது என்றால் சரியல்ல. நான் வெளியூரில் வேலை பார்த்து வந்ததால் அவர் மீது அப்போது நடவடிக்கை எடுத்தேனா என்றால் அப்போது எனக்கு தெரியாது. தாவா சொத்தில் குரூமுர்த்தி வீடு கட்டியுள்ளாரா என்றால் நான் விட்டவாறு உள்ளது. தாவா சொத்தை குரூமுர்த்தி அவரது மகன் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்து குரூமுர்த்தி அனுபவத்தில் நீண்ட் நாட்களாக இருப்பதால் சொத்து அவருக்கு பாத்தியப்பட்டுவிட்டது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.